மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.

2024 - ம் ஆண்டு ஜுன் திங்கள் 13- ம் நாள் வியாழக்கிழமை

திருமதி. N.மீனாட்சி, B.A.B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதிமொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : செல்வம் | அசல் வழக்கு எண்: 46/2023 |
| த/ பெயர் | : பொன்னையா | வாதி தரப்பு சாட்சி எண். 1 |
| வயது | : 58 | |
| கிராமம் | : வால்பாறை நகைக்கடைவீதி | |
| வட்டம் | : | |
| சமயம் | : | |
| தொழில் | : நகை அடகு கடை | |

1. எனது தரப்பில் ஆணையுறுதிப் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

| ஆ. எண். | ஆவணம் | ஆவண தன்மை | ஆவண குறியீடு |
|---|---|---|---|
| 1. | 01.06.2022-ம் தேதியிட்டு வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரோ நோட்டு அசல் | அசல் | வா.சா.ஆ.1 |
| 2. | 08.08.2023-ம் தேதியிட்டு 10.08.2023-ம் தேதி வாதியானவர் பிரதிவாதியானவருக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு நகல்( ரசீதுடன்) | அலுவலக நகல் | வா.சா.ஆ.2 |
| 3. | 11.08.2023-ம் தேதி பிரதிவாதியால் அறிவிப்பை பெற்றுக்கொண்டதக்கான ஒப்புகை அஞ்சல் அட்டை | அசல் | வா.சா.ஆ.3 |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதி வாதி தரப்பு குறுக்குவிசாரணை**

1. நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் எந்த வகையில் பழக்கம் ஆனவர். எத்தனை ஆண்டுகள் எனக்கு தெரியும் என்ற விவரங்களை வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிராதிலும், நிருவண வாக்குமூலத்திலும், நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிராதிலும், நிருவண வாக்குமூலத்திலும், 01.06.2022-ம் தேதிக்கு முன்பு எனக்கும், பிரதிவாதிக்கும் பணப்பரிமாற்றம் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. நான் வால்பாறையில் சிந்து பைனான்ஸ் என்ற நிறுவனம் நடத்திவருகிறேன் என்றால் சரிதான். கோயம்புத்தூரிலும் அதே பேரில் பைனான்ஸ் நடத்திவருகிறேன் என்றால் இல்லை.

வால்பாறையில் சிந்து பைனான்ஸ் என்ற பெயரிலும், கோயம்புத்தூரில் சரவணா பைனான்ஸ் என்ற பெயிலும் முறையாக பதிவு செய்து பைனான்ஸ்சும், நகை அடகு கடையும் வைத்துள்ளேன். வேறு எந்த ஊரில் பைனான்ஸ் நடத்தி வருகிறேன் என்றால் மேற்படி இரு ஊர்களை தவிர சோலையார்டேமில் ஒரு பைனான்ஸ் நடத்தி வருகிறேன். நான் பைனான்ஸ் நடத்தி வருவதால் பத்திரம் என்பதும், கடனுறுதசீட்டு என்பதற்கும் உள்ள விவரங்கள் தெரியும் என்றால் தெரியும்.

3. பொதுவாக பத்திரத்தில் பணம் கொடுக்கபவர் கையொப்பமும், பணம் பெறுபவர் கையொப்பமும், சாட்சி கையொப்பமும் இருக்கவேண்டும் என்றால் அது எனக்கு தெரியாது. எங்களது பைனான்ஸ்ஸில் பணம் வாங்குபவர் கையொப்பம் பெறுவது வழக்கம். பணம் கொடுப்பவரின் கையொப்பம் செய்வது இல்லை.

4. பிராதில் 2-வது பக்கத்தில் 8-வது பராவில் கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தாக உள்ளது என்றால் சரிதான். நாங்கள் புரோநோட்டை கடன் பத்திரம் என்று குறிப்பிடுவது வழக்கம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் ’01.06.2022-ம் தேதி வால்பாறை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணியாற்றி வரும் பொன்னையா மகன் பி.சின்னமாரிசாமி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி சொன்னதை அப்படியே எழுதப்பட்டது.

5. எனது மகள் சிந்து வால்பாறை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். 01.06.2022-ம் தேதி பிரதிவாதி வால்பாறை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணிபுரிந்ததற்கான வருகை பதிவேடு கல்லூரி நிர்வாகத்தினடம் இருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் நான் அதை கேட்டு வாங்கவில்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10-ம் வகுப்பு படித்துள்ளேன்.

6. வா.சா.ஆ.1 ஆவணத்தை நானோ, பிரதிவாதியோ எழுதவில்லை என்றால் சரிதான். மணிகண்டன் என்பவர் எழுதினார். பிராதிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும்,பிரதிவாதி 01.06.2022-ம் தேதியிலும், அதற்கு முந்தைய தேதியில் வால்பாறையில் எந்த வார்டு, கதவு எண், முகவரி குடியிருந்து வருகிறார் என்று எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவர் பணம் பெறும் போது எங்களிடம் என்ன சொன்னாரோ அதை மட்டும் தான் குறிப்பிட்டோம்.

7. எனக்கு பிரதிவாதியை பற்றி எனக்கு முழுமையான எந்த விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் சாட்சிகள் என்ற இடத்தில் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எழுதியதும் சாட்சியமாக மணிகண்டன் கையொப்பம் செய்தார். பணம் பெறும்போது இரவு 10.00 மணி என்பதால் வேறு சாட்சிகளை அழைக்க இயலவில்லை. எழுதியதாக கையொப்பம் செய்துள்ள மணிகண்டன் எனது உறவினர் மற்றும் எனது பைனான்ஸ்சில் வேலை செய்கிறார் என்றால் சரியல்ல. அவர் அவரது மச்சுனன் பைனான்ஸ்சில் வேலை செய்து வருகிறார். எங்களது வீட்டில் இருந்து மணிகண்டனின் வீடு எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் என் வீட்டிலிருந்து நான்கு வீடு தள்ளி உள்ளது.

8. பிராது, வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.1 ஆவணத்திலும் சின்னமாரிசாமி என பிரதிவாதியின் பெயர் உள்ளது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் சின்னமாரிச்சாமி என உள்ளது என்றால் சரிதான். வால்பாறையில் உள்ள சிந்து பைனாஸ் நகை கடையும் எனது வீடும் ஒன்றாக அமைந்துள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி 01.06.2022-ம் தேதி எனது வீட்டில் பணம் வாங்கம் போது அவருடன் யார் வந்தது எனது வீட்டில் வேறு யாரு இருந்தது என்றால் பிரதிவாதி மட்டும் இருந்தார். எனது வீட்டில் எனது மனைவி, மருமகன் எனது குடும்பத்தார்கள் இருந்தார்கள். எனது வீட்டில் எனது குடும்பத்தார் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான்.

9. வா.சா.1-ல் எனது வீட்டில் இருந்த நபர்கள் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டுடன் உள்ள பைனாஸ்ஸை வழக்கமாக எத்தனை மணிக்கு திறந்து எத்தனை மணிக்கு மூடுவோம் என்றால் காலை 08.30 மணியளவில் திறந்து இரவு 09.00 மணிக்கு கடையை மூடிவிட்டு வீட்டுக்குள் இருந்துவிடுவோம். 01.06.2022-ம் தேதியிலும் இரவு 09.00 மணிக்கு கடையை மூடிவிட்டோம் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு, பிராது, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் அசல் மற்றும் வட்டி தொகைகளை பிரதிவாதியிடம் திருப்பி கேட்டதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதி கையொப்பம் செய்ததாக உள்ள இடத்திற்கு கீழ் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் எனது நகை கடைகளில் அடகுக்கு வரும் நகைகளுக்கு உரிய அசல் மற்றும் வ்ட்டி தொகைகளை அடகு வைக்கும் நபர் உரிய காலத்தில் செலுத்தவில்லை என்றால் நான் அதனை நானாகவே ஏலத்திற்கு விற்று பணத்தை பெற்றுக்கொள்வது எனது பைனான்ஸில் வழக்கமாக கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு அடகு பெறும் நகைகளை ஏலம் விட்டதற்காக என் மீது கோயம்புத்தூர் நீதிமன்றங்களில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

11. நான் பல்வேறு நீதிமன்றங்களில் புரோநோட்டு மற்றும் காசோலை வழக்குகள் மற்றும் நகை அடகு வைத்த வழக்குகள் என பல வழக்குகளை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வால்பாறை நீதிமன்றம் தவிர வேறு எந்த நீதிமன்றத்திலும் நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்ய வில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதியின் கைரேகை எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். பிராது , வழக்கறிஞர் அறிவிப்பு, நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதியிடம் எந்த இடத்தில் வைத்து எந்த தேதியில் பணத்தை திருப்பி கேட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

12. 01.06.2022-ம் தேதியிலிருந்து வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பு 08.08.2023-ம் தேதி வரை புரோநோட்டில் குறிப்பிட்டுள்ள தொகைக்கான வட்டி தொகை ரூ.14,000/-ம் வரும் என்றால் அதை நான் கணக்கிடவில்லை. நான் அசல் மற்றும் வட்டி தொகைகளை சேர்க்கும் போது ரூ.1,14,000/-ம் வரும் என்றால் நான் வட்டி தொகையை கணக்கிடததால் தெரியவில்லை. எனது வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதி அசல் மற்றும் வட்டி தொகைகளை தரவில்லை என்று தான்

அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் வட்டி தவிர அசல் தொகையை மட்டும் கொடுக்க கேட்டு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பில் வட்டியுடன் அசல் தொகையை திரும்ப செலுத்த கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் கோரிய படி வட்டி மற்றும் அசல் தொகையான மொத்த தொகை ரூ.1,14,000/-ம் வழக்கு தாக்கல் செய்தால் நீதிமன்ற அதிகார வரம்பு இந்த நீதிமன்றத்திற்கு வராது என்பதால் வட்டி தொகையை கோராமல் அசல் தொகையை மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வட்டி தொகையான ரூ.14,000/-த்தை கோராமல் அசல் தொகைக்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

14. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டபடி வட்டி தொகையை கோராமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வா.சா.ஆ.1 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. 01.06.2022-ம் தேதியில் இருந்து 08.08.2023-ம் தேதி வரை அசல் தொகைக்கான வட்டி தொகை ரூ.14,000/-த்தை கழித்து கொண்டு வழக்கு செய்வதாக பிராதிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு அசல் கிடைத்தால் போதும். எனக்கு அசல் மட்டும் போதும் என்பதையும் பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

15. எனது மகள் சிந்து வால்பாறை அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உதவி போராசிரியாராக பணிபுரிந்து வருவதால் அவர் வால்பாறை அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தை எடுத்து வந்து என்னிடம் கொடுத்து அந்த புரோநோட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. 01.06.2022-ம் தேதி பிரதிவாதி வால்பாறை அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணிபுரிந்து வரவில்லை வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

16. 01.06.2022-ம் தேதி நீலகிரி மாவட்டம் கூடலூர் உள்ள அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போராசிரியராக பணிபுரிந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. பிரதிவாதி வால்பாறை கல்லூரிக்கு வந்துவிட்டதாக சொன்னார். பிரதிவாதி 01.06.2022-ம் தேதி வால்பாறை கல்லூரிக்கு வந்துவிட்டதாக பிரதிவாதி சொன்னதாக நான் வழக்கிற்காக தவறாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 01.06.2022-ம் தேதி பிரதிவாதி வால்பாறையில் இல்லை என்பதாலும் வழக்கு அசல் தொகைக்கான வட்டியுடன் சேர்த்து ரூ.1,14,000/-க்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. பணம் வாங்கும் போது பிரதிவாதி வால்பாறையில் இருந்தார்.

17. வா.சா.ஆ.1 ஆவணம் பிரதிவாதியை ஏமாற்றி பணம் பரிக்கும் நோக்கத்தோடு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் என்னை ஏமாற்றம் செய்யும் நோக்கத்தோடு வாதம் செய்து வருகிறார். எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிராது, நிரூபண வாக்குமூலத்திலுள்ள

சங்கதிகள் முற்றிலும் தவறானவை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியவை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் பிரதிவாதிக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

**இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை